CC.No. 48/2020 26.03.2026

PW1 பூமாலை க/பெ. பூமிநாதன்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

முருகதாஸ் என்பவர் எதிரியின் சகோதரர் என்றால் சரிதான். முருகதாஸ் என்பவரையும், அவரது தாயார் சந்தோசம் என்பரையும், நானும், எனது கணவர் பூமிநாதன், சத்யா, அமராவதி, தங்கராஜ், பஞ்சு ஆகியோர்கள் சேர்ந்து கடந்த 16.05.2017 ம் தேதி இரவு 08.00 மணிக்கு அவர்களது வீட்டின் முன்பாக பாதை பிரச்சனை சம்மந்தமாக அவர்களை அடித்து காயப்படுத்தி அதன்பேரில் முருகதாசும், அவரது தாயாரும் மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அது சமமந்தமாக என் மீதும், எனது தரப்பினர்கள் மீதும் மேலவளவு காவல் நிலைய குற்ற எண் 173/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கூறிய குற்ற வழக்கு தொடர்பாக இந்நீதிமன்றத்தில் ஜாமீன் பெற்றுள்ளேன் என்றால் தெரியாது. முருகதாசின் வீடு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கைலம்பட்டி தார் ரோடு எங்கள் கிராமத்தில் கிழக்கு மேற்காக செல்கிறது, அந்த ரோடானது மேலவளவு மெயின் ரோட்டில் சேர்க்கிறது என்றால் சரிதான். முருகதாஸ் வீடு தார் ரோட்டிற்கு ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அவரது வீட்டிற்கு எதிரே பஞ்சு வீடு உள்ளது என்றால் சரிதான்.

2) பஞ்சு வீட்டிற்கும், முருகதாஸ் வீட்டிற்கு 1 மீட்டர் அகலம் சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த சந்து வழியாகத்தான் அனைவரும் செல்வார்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி பஞ்சு, அமராவதி, தங்கராஜ், சத்யா, அரிச்சந்திரன் எனது உறவினர்கள் என்றால் சரிதான். மேற்கூறிய பாதையின் இடையே சாட்சி சத்யா கழிவறை அமைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த இடத்தில் கழிவறையை நீக்க முருகதாஸ் என்பவர் வட்டாட்சியர் மனு கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அதனால்தான் முருகதாசை நாங்கள் தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால்தான் அவரது தம்பியான இந்த எதிரி

மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) அந்த தார் ரோட்டிலிருந்து முருகதாஸ் வீட்டிலிருந்து எனது வீடு 10 வீடு தள்ளி உள்ளது என்றால் சரியல்ல, 3 வீடு தள்ளி உள்ளது. எனது கணவருக்கு புவனேஷ்வரன் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். புவனேஷ்வரனின் தாயார் பெயர் சந்திரா என்றால் சரிதான். எனது சொந்த ஊர் என்ன என்றால் நான் பிறந்த ஊர் அலங்கம்பட்டி. எனது கணவர் மீது இந்நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். முருகதாசையும், அவரது தாயாரையும் 16.05.2017ம் தேதி நாங்கள் தாக்கிய விவரம் இவ்வழக்கின் எதிரிக்கு தெரியாது, எதிரி மறுநாள் தனது வீட்டிற்கு சென்றபோது நாங்கள் தான் எதிரியை அடித்து துண்புறுத்தி அவரது காலில் கல்லை கொண்டு அடித்து காயம் ஏற்படுத்தியுள்ளோம், அவர் அந்த காயத்துடன் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துள்ளார், அவர் கொடுத்த புகாருக்கு நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்று அஞ்சி பொய்யாக எதிரி மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் மருத்துவமனையில் சிகிச்சை பெறாமல் தலைமறைவாகிவிட்டேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.